www.padippakam.com

# எமது நிலைப்பாடு பற்றி ஈழதேச மக்களுக்கு!

மத்திய குழு சார்பாக
செயலாளர் நாயகம்
**க. பத்மநாபா**

**ஈழ மக்கள்**
**புரட்சிகர விடுதலை முன்னணி**
**(EPRLF)**

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# எமது நிலைப்பாடு பற்றி ஈழ தேச மக்களுக்கு!

ஈழ தேச மக்களே!

கடந்த டிசம்பர் 13ந் திகதியும் அதைத் தொடர்ந்த சில நாட்களின் போதும் தமிழீழ விடுதலைப் புலிகள் எம்மீது நடத்திய பாரிய வெறுக்கத்தக்க மோதலினைத் தொடர்ந்து நீண்ட காலமாக ஓர் ஒழுங்கான தொடர்ச்சியான தொடர்புகளை உங்களுடன் எங்களால் ஏற்படுத்திக் கொள்ள முடியாமற் போன துரதிஷ்ட நிலைமை எமது போராட்டத்தில் நிலவியதை நீங்கள் அறிவீர்கள்.

எமது ஸ்தாபனத்தின் இன்றைய நிலையையும் நிலைப்பாடுகளையும் உங்களுக்குத் தெரியப்படுத்துவது எமது கடமையென்ற வகையில், இப்பிரசுர வாயிலாக உங்களுடன் நிலைமைகளைப் பகிர்ந்து கொள்ள எத்தனிக்கிறோம்.

"நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? என்ன செய்யப் போகிறீர்கள்?" போன்ற கேள்விகளை நீங்கள் எம்மை நோக்கி எழுப்புவதை நாங்கள் உணர்கிறோம்.

நாங்கள் என்ன செய்யப் போகின்றோம் என்னும் உங்களின் கேள்விக்கு பதிலாக ஒரு வார்த்தையில் சொல்வதானால், **'உங்களுடன் இணைந்து நின்று எமது பாசமிகு தேசத்தின் எதிரிகளுக்கெதிராக நாங்கள் தொடர்ந்து விடாப்பிடியாகப் போராடுவோம்'** என்பதே.

***ஸ்ரீலங்கா அரச படைகளின் அட்டூழியங்களாலும், எமது போராட்ட இயக்கங்களுக்குள்ளேயே உருவான***

படிப்பகம்

www.padippakam.com



கோடாரிக் காம்புகளான தமிழீழ விடுதலைப் புலிகளின் கொடுமைகளாலும் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கும் உங்களின் மத்தியில் உண்மையான போராளிகளாக உங்களின் அங்கங்களாக நின்று தொடர்ந்து செயற்பட்டுக் கொண்டே இருப்போம்.

## எமது தேசத்தின் நிலைமை

எமது தேசத்தில் இதுவரை 15,000 பேர் வரை ஶ்ரீலங்கா அரச படைகளால் கொல்லப்பட்டுள்ளனர். 5000 பேர் வரை சிறைகளிலும், வதை முகாம்களிலும் அடைக்கப்பட்டுச் சித்திரவதை செய்யப் படுகின்றார்கள். கைது செய்யப்பட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியாது;

எமது தேச மக்களில் ஏறத்தாழ 3 லட்சம் பேர் வரை அகதிகளாக எமது தேசத்தினுள்ளும், இந்தியாவிலும் உலகின் பல பாகங்களிலும் அலைந்து திரிகின்றார்கள். நாம் புனிதமானவை எனக் கருதும் எமது கோவில்கள், தேவாலயங்கள், நூல் நிலையங்கள், பாடசாலைகள், மருத்துவமனைகள், அரச படைகளால் அழிக்கப்பட்டுள்ளன;

எமது கடல்கள், வயல்கள் வனங்கள், ஆறுகள் என்பன நாம் உபயோகிக்க முடியாத தடைப் பிரதேசங்களாக்கப்பட்டுள்ளன. இதனால் அன்றாட உழைப்பில் ஜீவனோபாயம் நடத்தும் பல்லாயிரக்கணக்கான மீனவர்களும், விவசாயிகளும், மற்றும் மக்களும் வாழ வழியின்றி அலைகின்றனர்;

ஊர்காவற் படை என்னும் அரசின் குண்டர் படைக் கூட்டம் ஆயுதங்கள் சகிதம் எமது மண்ணில் தொடர்ச்சியாக குடியமர்த்தப்படுகின்றது. எமது வீடு வாசல்களை, உற்றார் உறவினர்களை தொடர்ச்சியாக

படிப்பகம்

www.padippakam.com



இழந்து வருகின்றோம். எரிகுண்டு வீச்சும், மனிதச் சாவும் மலிந்து விட்ட எமது தேசத்தில் பதுங்கு குழி வாழ்க்கை எமக்கு நிரந்தரமாக்கப்பட்டுள்ளது. உணவும், எரி பொருட்களும், மருந்தும்கூட மறுக்கப்படுகின்றன. முற்போக்கு உலகின் மனித உரிமை ஜனநாயகத்தை நேசிக்கும் சக்திகளின் கண்டனங்களுக்கு மத்தியிலும் ஸ்ரீலங்கா அரசு எந்தவித கூச்சநாச்சமுமின்றி தொடர்ந்தும் அவ்வாறே செயற்பட்டு வருகின்றது.

இத்தகைய நிலைமைகளினிடையில் தனது சக போராட்ட இயக்கங்களை அழிப்பதிலும் மக்களைத் துன்புறுத்துவதிலும் ஈடுபட்டு வரும் **தமிழீழ விடுதலைப் புலிகளின் அராஜகம் சிறிலங்கா அரசின் கொடூரங்களுக்கு தானும் எந்த வகையிலும் சளைத்ததல்ல** என்று தலை விரித்தாடி கொண்டேயிருக்கின்றது. இவ்வாறான நிலைமைகளில் போராட்டத்தில் விரக்தியும் அவநம்பிக்கையும் எந்த வகையிலாயினுமான அமைதிக்கான வேட்கையும் தலை தூக்குவது இயல்பானதே.

## சமாதானத்திற்கான வேட்கை :

ஆம்! எங்களுக்குச் சமாதானம் வேண்டும்! உண்மைதான்! ஆனால் அதனை ஒடுக்குமுறைகளுக்கும் அடக்குமுறைக் கொடூரங்களுக்கும் அடிபணிவதன் மூலம் பெறமுடியாது. இரத்தத்தால் எழுதப்படும் எமது போராட்ட வரலாற்றின் கனதியான பெறுமானமாக ஸ்ரீலங்கா அரசின் ஆதிக்கத்தை எமது தேசத்தில் செயலிழக்கச் செய்வதன் மூலமே அச்சமாதானத்திற்கான அடிக்கல்லை நாம் நாட்ட முடியும். நாம் கருதுகின்ற அந்த வகையான சமாதானத்தை எம்மால் எட்டமுடியுமா? அதற்காகப் போராடக் கூடிய வழிகாட்டிகள் எம்மத்தியில் இருக்கிறார்களா? என்று நீங்கள் அங்கலாய்ப்பதையும் நாங்கள் புரிந்துக் கொள்கிறோம்.



படிப்பகம்

www.padippakam.com



அன்புக்குரிய ஈழதேச மக்களே! நாம் எல்லோரும் இணைந்தே அப்பணியைச் செய்ய வேண்டும். இதுவரை எமது போராட்டம் கண்டிராத மிக மோசமான தற்போதைய நெருக்கடியான நிலைமைகளின் மத்தியில் இது மிகவும் கடுமையான பணிதான் **நேற்றைய அனுபவங்களிலிருந்து படிப்பினைகளைப் பெற்ற புதிய, சக்திகள் போராட்டக் களத்தில் முன்னணியில் நிற்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அந்த சத்திகள் எங்கிருந்து வர முடியும்? அது மக்கள் மத்தியிலிருந்தே வரமுடியும். வரவேண்டும்.** அப்பணியைச் செய்வதற்கு உங்களுடன் சங்கமமாகி நின்று போராடவே நாம் திட உறுதி கொண்டுள்ளோம். வியட்நாம், கியூபா, மற்றும் பல தேசங்களின் மக்கள் பல தசாப்தங்களாக நடத்திய போராட்டங்களில் பின்அடைந்ததைப் போன்ற மிக உயர்ந்த சமாதானத்தை—அமைதியான வாழ்க்கையை நாம் எய்துவோம். இந்தத் தலைமுறையில் இல்லாவிடினும் எமது எதிர்காலத் தலைமுறையினராவது நிச்சயமாக அதை எய்துவர் என்னும் உறுதியோடும் நம்பிக்கையோடும் தற்போதைய காலத்தின் கடமைகளை திசை வழியை செப்பனிடுவோம்—பொறுப்போடு செயற்படுத்துவோம்.

## எமது விடிவு எமது கரங்களிலே:

எமது விடிவிற்கான போராட்டத்தில் எம் எல்லோருக்குமே பங்குண்டு. இதனைச் செய்து முடிப்பதற்கு **மீட்பார்கள் யாரும் வருவார்கள்** என நீங்கள் எண்ணவும் வேண்டாம், எதிர்பார்க்கவும் வேண்டாம். நாமே இங்கு நமக்கு மீட்பனர். **எமது விடிவு பிரதானமாக எமது சொந்தக் கரங்களிலேயே தங்கியிருக்கிறது என்பதில் நாம் எப்போதும் தெளிவாக இருக்க வேண்டும்.** சர்வதேச ஜனநாயக முற்போக்குப் புரட்சிகரச் சக்திகளது ஆதரவு எமக்குத் தேவையே எனினும் எமது விடிவிற்

படிப்பகம்

www.padippakam.com



கான போராட்டத்தை நாமே நடத்தி முடிக்க வேண்டும்.

ஒரு பக்கத்தில் ''எங்கட பொடியன்கள்'' எல்லாவற்றையும் செய்து முடிப்பான்கள்'' என்று சொல்லிவிட்டு நீங்கள் தூரத்தில் இருந்த நிலையும் இன்றைய பரிதாப நிலைக்குக் காரணமாகும்.

மறுபக்கத்தில் 'எங்கட பொடியன்கள்' என்று நீங்கள் செல்லமாக அழைத்தவர்களோ போராட்டம் பற்றிய முன் அனுபவம் இல்லாமலும் அதைப் பற்றிய தெளிவான பார்வை இல்லாமலும், மக்கள் மத்தியில் வேலை செய்த பரிச்சயம் இல்லாமலும், யாருக்கு விடுதலை என்பதில் தெளிவான கருந்து இல்லாமலும், எல்லாச் சமூக அரசியல் விவகாரங்களையும் துப்பாக்கிக் குழாயினூடாகப் பார்த்தமையினாலுமே நாம் ஜீரணிக்க முடியாத இன்றைய நிலைமைகளைக் காண வேண்டி ஏற்பட்டது. போராட்டத்தை நீங்கள் 'பொடியன்' களிடம் ஒப்படைத்தபோது பொடியன்கள் போராட்டத்தை உங்களிடமிருந்து குத்தகைக்கு எடுத்துக் கொண்ட நிலைமையும் எமது வரலாற்றில் இனியும் தொடரக் கூடாது மீண்டும் நிகழக்கூடாது. இதுவரை பொடியன்களின் போராட்டம் என இருந்து வரும் நிலையை, **மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் மக்களின் போராட்டம் என்னும் நிலைமைக்கு மாற்ற வேண்டிய அவசியமும் கடமையும் ஒவ்வொருவருக்கும் உண்டு என்பதில் ஒவ்வொவரும் உறுதியெடுத்துச் செயற்பட வேண்டும்.**

## கடந்த காலத் தவறுகள் :

1. மொத்தப் போராட்ட இயக்கத்தில் நீங்கள் பார்வையாளர்களாக இருந்தமை, போராட்டத்தினால் ஏற்படும் துன்பங்களைத் தாங்கிக் கொள்வதும், ஆயுதந் தாங்கிப் போராடுபவர்களுக்கு 'சோத்து' பார்சல்

படிப்பகம்

www.padippakam.com



கொடுப்பதும், அவர்களுக்கு பொருளுதவி செய்வதும்தான் உங்கள் கடமை என நீங்கள் கருதிக்கொண்டமை—செயற்பட்டமை, 'பொடியன்களின் இயக்கங்கள் உங்களிடமருநது ஏதாவது பெற்றுக் கொள்வது அல்லது எடுத்துக் கொள்வது என்பதற்கு மேலாக உங்கள் மீது அக்கறை செலுத்தாமை.

2. ஆயுதமேந்திய இளைஞர்கள் பெரும்பான்மையானோரிடம் வரலாறு, சமூகம் பற்றிய தெளிவான பார்வையோ, அனுபவமோ, தெரிந்து கொள்வதற்கான ஆர்வமோ இன்மை.

3. எதிரிக்கு எதிராக என ஏந்தல்பட்ட ஆயுதங்கள் **தேச பக்த சக்திகளுக்கும், மக்களுக்குமெதிராகப் பாவிக்கப்பட்டமை.**

4. மக்களிடையே ஐக்கியமின்மை, போராட்ட குழுக்களிடையே ஐக்கியமின்மை, போராளிகளுக்கிடையே ஐக்கியமின்மை நிலவியமை.

5. போராட்ட அமைப்புகளினுள் வேறுபாடுகளை முரண்பாடுகளை துப்பாக்கி முனையில் தீர்த்துக் கொண்டமை. **இதனை ஒரு பகுதியினர் இராணுவக் கட்டுப்பாட்டுக்கு அவசியமென இன்னும் நியாயப் படுத்தி வருகின்றமை.**

6. எமது தேசத்தின் பல்வேறுபட்ட பிரிவு மக்களிடையே விரிசல்களை உண்டாக்கும் வகையில்—அதனை எதிரி தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக் கொள்ளும் வகையில் போராட்ட இயக்கங்களின் ஆயுத நடவடிக்கைகள் குருட்டுத்தனமாக அமைத்தமை.

7. போராட்டத்திற்கு நிதி தேவை, பொருள் தேவை என்பதன் பேரில் இயக்கங்கள் மக்களின் தனிப்

படிப்பகம்

www.padippakam.com



பட்ட—பொதுச் சொத்துக்களின் மீது கைவைப் பதில் கண்மூடித்தனமான அணுகுமுறைகளைக் கையாண்டமை. இதனை ஆங்காங்கே சமூக விரோதி களும் கூட தமது குறுகிய நோக்கங்களுக்குப் பயன் படுத்திக் கொள்ள இடமளித்தமை;

8. ஆயுதப் போராட்டம், பேச்சுவார்த்தை சம்மந்தப் பட்ட மூலோபாயங்கள், தந்திரோபாயங்களில் பொதுவாக நிலவும் தெளிவின்மை;

9. தென்னிலங்கையின் ஜனநாயக முற்போக்குச் சக்தி களுடன் உறவுகளைப் பலப்படுத்துவதில் அக்கறையோ ஆர்வமோ காட்டாதது மட்டுமல்ல அதற்காக உருவாகும் சிறுவாய்ப்புக்களைக் கூட பாழ்படுத்தி வருகின்றமை;

10. **சர்வதேச அரங்கில் எமது எதிரிகள் யார் நண்பர்கள் யார் எனத் தெளிவாக இனங்கண்டு உறுதியாகச் செயற்படாமல் சந்தர்ப்பவாதப் போக்குகளைக் கடைப் பிடித்து வந்துள்ளமை;** போன்ற பல தவறுகளை உள்ளடக்கியதாகவே ஈழப் போராட்டம் இருந்து வந்திருக்கிறது.

ஒட்டு மொத்தமாகக் கூறின், ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான சரியான **அரசியல் திசை மார்க்க மற்ற ஒரு இயக்கமாகவே ஈழப்போராட்டம் இயங்கி வந் திருக்கிறது** என்ற உண்மையை நாம் விரும்பியோ, விரும்பாமலோ ஜீரணித்தே ஆகவேண்டியது தவிர்க்க முடியாததாகும்.

இந்தத் தவறுகள் அனைத்தினதும் மொத்த விளைவு களையே நாம் அனைவரும் இன்று அனுபவித்துக் கொண் டிருக்கிறோம். இத்தவறுகளை எவ்வித தயக்கமும் இன்றி யும், துணிவோடும் களையாவிட்டால்—இத்தவறுகளைக்

படிப்பகம்

www.padippakam.com



களைவதற்காக நாம் அனைவரும் அனைத்து முனைகளிலும் போராடாவிட்டால் தேச விடுதலை: சமுதாயப் புரட்சி என்பன பற்றி நாம் கொண்டிருக்கும் அபிலாசைகள் யாவும் வெறும் கனவுகளாகவும் கற்பனைகளாகவுமே முடியும்.

## எமது ஸ்தாபனத்தைப் பற்றி :

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரையில் ஈழதேசத்தின் விடுதலை சமூகப் புரட்சி, சமாதானம் என்ற இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஸ்தாபனமேயாகும்.

அந்த இலட்சியங்களை அடைவதற்கு பிரயத்தனங்களைக் கடந்த காலத்தில் எல்லா முனைகளிலும் எம்மால் இயன்றளவிற்கு மேற்கொண்டோம். தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள், மாணவர்களை ஸ்தாபன ரீதியாக அணிதிரட்ட முற்பட்டோம். குறிப்பிடத்தக்களவு வெற்றியும் பெற்றோம். ஆயுதப் போராட்டம் தவிர்க்க முடியாத வரலாற்று விதியாக எமது அரசியல் வரலாற்றில் ஏற்பட்ட போது நாம் எமது மக்கள் விடுதலைப் படையை ஸ்தாபித்து ஸ்ரீலங்கா அரசின் அரச பயங்கரவாததிற்கும், இனப்படுகொலைகளுக்குமெதிராக எமது புரட்சிகர வன்முறை நடவடிக்கைகளை ஆரம்பித்தோம். ஆயுதப் போராட்டக் களத்தில் பல முன்னேற்றங்களையும், அனுபவங்களையும் சந்திக்க முடிந்தது.

அதே வேளை எமது இலட்சியங்களுக்கு விரோதமான, நாம் கடைப்பிடித்த புரட்சிகர சித்தாந்தத்திற்கும், ஸ்தாபனக் கோட்பாடுகளுக்கும் விரோதமான சில நடைமுறைப் பிரச்சனைகள், தவறுகள் எமது ஸ்தாபனத்திற்குள்ளும் சில மட்டங்களில் தலை தூக்கியது. இதனால் ஸ்தாபனம் பல இழப்புக்களைத் தாங்க வேண்டி ஏற்பட்

www.padippakam.com



டது மட்டுமல்லாது முன்னேறுவதில் தடைகளையும் சந்திக்க வேண்டியேற்பட்டது. ஸ்தாபனத்திற்குள் நிலவிய சீர்குலைவுப் போக்குகளைக் களைந்து முன்னேறும் முயற்சிகளில் நிதானமாகவும் பொறுமையாகவும் அதே வேளை விரைவான நடைமுறைகளிலும் ஈடுபட்டோம். எமது ஸ்தாபனம் உள்நெருக்கடிகளை ஜனநாயகத்தை மீறு வகையில் களைந்து தலை தூக்கி நிமிர்ந்து கொண்டிருந்த வேளையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கொலை வெறித் தாக்குதல் எமது செயற்பாடுகளில் பாரிய நெருக்கடிகளையும், புதிய சிக்கல்களையும் உருவாக்கியது. தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி என இயக்கங்கள் ஒவ்வொன்றின் மீதும் தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய பாய்ச்சல் ஒட்டு மொத்தமாகவே போராட்டத்திலும் பாரிய நெருக்கடிகளையும் சிக்கல்களையும் உருவாக்கி உள்ளது.

## என்ன செய்யப் போகிறோம்?

### 1. ஆயுதப் போராட்டமும் மக்கள் போராட்டமும் :

இது காலவரையுமான தவறுகள் மற்றும் அனுபவங்களைப் படிப்பினையாகக் கொண்டு புதிய அணுகுமுறைகளை சரியான மூலோபாயங்கள், பொருத்தமான தந்திரோபாயங்களைக் கையாண்டு எமது தேசத்தின் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தை தொடர்ந்து விடப்பிடியாக முன்னெடுப்போம்.

***புரட்சிகர ஸ்தாபனமின்றி புரட்சியில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்.*** அந்த அடிப்படையில் எமது ஸ்தாபனத்தை மேலும் புரட்சிகரமானதாக்கி விரிவுபடுத்திப் பலப்படுத்துவோம். எமது ஆயுதந்தாங்கிப் போராடும் வீரர்களை மேலும் விஞ்ஞான பூர்வமாகவும், நடைமுறை பூர்வமாகவும், அமைப்பு ரீதியிலும், செயல்பாட்டு ரீதியிலும்

www.padippakam.com



பலமடங்கு வலுவுள்ளவர்களாக்குவோம்; கட்சியோடும் ஆயுதப் படையோடும் பின்னிப்பிணைந்த வகையில் வெகுஜன ஸ்தாபனங்களையும், முன்னணி ஸ்தாபனங்களையும் பரந்துபட்ட ரீதியில் மக்களைப் போராட்டத்துடன் இணைக்கும் வகையில் தட்டி எழுப்புவோம்; இவை அனைத்திற்கும் அகப்புற நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கருத்திற்கெடுத்துக் கொண்டு திட்டங்களுக்கான நடைமுறைத் தந்திரங்களை வகுத்துச் செயற்படுவோம்.

எமது ஸ்பானத்திற்கும், எமது ஆயுதப்படையான மக்கள் விடுதலைப் படைக்கும், வெகுஜன ஸ்தாபனங்கள், முன்னணி ஸ்தாபனங்களுக்குமிடையில் ஸ்தாபன உறவுகளிலும் செயற்பாடுகளிலும் கடந்த காலங்களில் நிலவிய குறைபாடுகளையும், இடைவெளிகளையும் எமது அறிவிற்கும், அனுபவத்திற்கும் எட்டிய வகையில் திருத்தி அமைத்து செயற்திறனுடைய தாக்குவோம்; ஸ்தாபனத்தின் அனைத்துப் பிரிவுகளும், அனைத்து அங்கங்களும், அனைத்து மட்டங்களும் ஒருமுகமாக, ஒற்றுமையாக எதிரிக்கெதிரான போராட்டத்தையே பிரதானக் இலக்காக கொண்டு முன்னை விட மிகுந்த உற்சாகத்துடனும், உத்வேகத்துடனும் செயற்படுவோமென உறுதியும், நம்பிக்கையும் கொள்கிறோம்;

எமது தேசத்தின் விடுதலைப் போராட்டமென்பது ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட ஆயுதப்படைப் பிரிவினரின் போராட்டமல்ல என்பதைத் தெளிவாக உணர்ந்து அதனை மக்கள் போராட்டமென்னும் உயர்ந்த வடிவநிலைக்கு மாற்றுவதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் நிதானமாகவும் உறுதியாகவுய மேற்கொள்வோம்;

ஆயுதம் தாங்கிய போராளிகள் என்போர் மக்கள் மீது அன்பு செலுத்துவோர், மக்களின் ஒரு பகுதியினர், மக்களோடு வாழ்பவர்கள், மக்களை அணிதிரட்டுபவர்

www.padippakam.com



கள், மக்களால் நேசிக்கப்படுபவர்கள் என்னும் நிலையில் நிலவிய கடந்த காலத் தவறுகளை தயக்கம் ஏதுமின்றிக் களைந்தே தீருவோம்; ஆயுதந்தாங்கிய போராளிகளுக் கும் மக்கள் இயக்கங்களுக்கும் பரத்துபட்ட பொதுமக் களுக்குமிடையில் ஒரு பிரிக்கமுடியாத செயற்பாட் டுறவை கட்டியெழுப்புவோம்;

**எமது ஆயுதப்போராட்ட மூலோபாயமாகிய நீண்ட காலப் போராட்ட முறை மூலம் இறுதி வெற்றி எமது மக்களுக்கே என்பதை நிலைநாட்டுவோம்;** குறுகிய தேசிய வாதி; தீவிரவாதக் குழுக்களின் பிழையான போக்குகளை யும், நிலையற்ற தன்மையினையும் நடைமுறையில் நிரூ பிப்போம்;

எதிரிகள் இல்லாத இடங்களில் கால்களை ஊன்றிப் பலப்படுத்தி எதிரிகள் இருக்கும் இடங்களை நோக்கி நகர்ந்து அவர்கள் எமது தேசத்தில் இல்லை என்ற நிலையை உருவாக்குவோம்; மக்களினிடையில் செயற்படும் இயக்கம் என்னும் நிலையிலிருந்து ஆரம்பித்து மக்கள் அனைவருமே இயக்கம் என்னும் நிலைக்கு விரிவடைவோம்,

புரட்சி பற்றியும் அதற்கான ஆயுதப் போராட்டம் பற்றியும் போராளிகள் மட்டுமல்லாது அனைவரும் கற்றுக் கொள்வோம். ஈழமக்கள் அனைவரும் ஒருங்கு திரண்டு எதிரிப்படைகளை எமது தேசத்திலிருந்து ஓடவிரட்டினர் கள் என்னும் வரலாற்றை உருவாக்குவோம்.

## 2. ஐக்கியமும் போராட்டமும் :

ஸ்ரீலங்கா அரசின் அடக்குமுறைகளைக்கண்டு சகிக்க முடியாது வெகுண்டெழுந்து போராட்ட அரங்கிற்கு வந்த இளைஞர்கள் தாம் தாம் விரும்பியவாறு வெவ்வேறு குழுக்களில் இணைந்து கொண்டார்கள், **இக்குழுக்கள்**

படிப்பகம்

www.padippakam.com



**யாவுமே ஒன்று சேர்ந்து ஒற்றுமையாக நின்று போராடி யிருக்க வேண்டியது ஒரு வரலாற்று அவசியமாக இருந்தது.** ஆனால் எமது போராட்ட அரங்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தோற்றம் ஒரு வரலாற்று விபத்தாக அமைந்து விட்டது. ''பொடியன்கள்'' ஐக்கியப்பட்டு விட்டார்கள் அவ் ஐக்கியம் விஸ்தரிக்கப்படவேண்டும் ஆழமாக்கப்பட வேண்டுமென நீங்கள் ஆவலுடன் இருந்த வேளையில் இக் கோடரிக்காம்புக்குழு ஒவ்வொர் விடுதலை இயக்கமாக சர்வதேச பிற்போக்குச்சக்திகளின் ஆயுதங்களின் துணை யுடன் வேட்டையாடத்தொடங்கியது.

உங்கள் நம்பிக்கைகள் தவிடு பொடியாகின. ஸ்ரீலங்கா இராணுவம எமது வீதிகளில் ஆரவாரித்தது. ஸ்ரீலங்கா அரசும் அதன் எஜமானர்களும் எள்ளி நகையாடினர்கள். இயக்கங்களின் கட்டுப்பாட்டில் இருந்தாகக் கருதப்பட்ட யாழ்குடா நாட்டில் வடமராட்சி அரச படைகளின் கை களில் பறிபோனது. இப்போராட்டத்தைப் பின்னடைய வைப்பதில் தமிழீழ விடுதலைப்புலிகளின் துரோகம் மன் னிக்க முடியாததாகும்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அடாவடித் தனங்களால் பல ஈழவிடுதலைப் போராட்ட இயக்கங்கள் அழிக்கப்பட்டும், எமது ஸ்தாபனத்தின் செயற்பாடுகள் முடமாக்கப்பட்டும்; எமது தோழர்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்பட்டும், எமக்காதரவளித்தவர்கள் துன்புறுத்தப் பட்டும் என அத்தனைய செயல்கள் தொடந்து கொண்டி ருக்கும் இந்த நிலையிலும் கூட தமிழீழ விடுதலைப்புலி களுக்கெதிரான பழிவாங்கல் நடவடிக்கைகளை நாம் பிர தான விடயமாகக்கருதவில்லை, எமது போராட்டம் பிர தானமாகச் ஸ்ரீசிறீலங்கா அரசுக்கெதிரானதென்பதில் மிகத் தெளிவாக உள்ளோம். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் ஸ்ரீலங்கா அரசுக்கெதிரான போராட்டத்தில் சகல போராட்ட இயக்கங்களுடனும் நட்புணர்வுடனும், சேர்ந்து செயற்படவும்; தேசத்திற்கெதிராகவும், மக்களுக்

படிப்பகம்

www.padippakam.com



கெதிராகவும் அது நடாத்திக் கொண்டிருக்கும் நடவடிக்கைகளை கைவிடவும் தயாராக இருந்தால் இப்போதும் கூட அவர்களுடன் நட்புறவு கொண்டு இயங்குவதற்கு நாங்கள் தயாராகவே உள்ளோம்.

ஏனென்றால் ஈழவிடுதலைப் போராட்டம் ஒரு சில தனி நபர்களின் விருப்பு வெறுப்புடன் சம்பந்தப்பட்ட விடயமல்ல, ஆத்திரத்திற்குப் பழிவாங்களுக்குப் பலியிடப்படுவதற்கான விவகாரமல்ல, மாறாக ஈழமக்களினதும், ஸ்ரீலங்கா அரசின் மேல் அதிருப்தி கொண்டு, போராட எத்தனிக்கும் சிங்கள மக்களினதும், ஏன் சமாதானம் சகஜ உறவை விரும்பும் இந்து சமுத்திரப்பிராந்திய மக்களது அபிலாசைகளுடனும் சம்பந்தப்பட்ட விடயமாகும். போராடும் சக்திகள் போராடும் மக்கள் அனைவரும் ஐக்கியப்படாமல் நடாத்தப்பட்ட எந்தத் தேசிய விடுதலைப் போராட்டமும் வெற்றி பெற்றதாகச் சரித்திரம் கிடையாது.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் தமது பாணியைக் கைவிடாது தொடர்ந்தும் அவ்வாறே தொடருவார்கள் ஆனால் அவர்களது அராஜக நடவடிக்கைகளை அம்பலப் படுத்துவதும், எம்மையும், தேசிய விடுதலைக்காகப்போராடும் ஏனைய குழுக்களையும், ஈழத்திலுள்ள அனைத்து மனித உரிமைகள், ஜனநாயகத்திற்கான சக்திகளையும் தற்காத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதும் எமது கடமையும் உரிமையுமாகும்.

இவ்வளவு இழப்புக்கள், பின்னடைவுகளிலும் கூட எமது போராட்டம் தொடர்ந்தும் இயக்கமுடையதாக இருக்கிறதென்றால் அதற்குக் காரணம் உங்களது தளராமன உறுதியும், சர்வதேச மனித உரிமை ஜன நாயகத்தை நேசிக்கும் சக்திகளின் துணையுமேயாகும்.

எமது தேசிய கௌரவத்தையும், சுயநிர்ணய உரிமையையும், சமூக முன்னேற்றத்தையும், சமாதானமான

படிப்பகம்

www.padippakam.com



வாழ்வையும் அடைவதற்கான விடுதலைப்போராட்டத்தை நாம் தொடர்ந்தும் உறுதியாக நடாத்த வேண்டுமானால் எமக்குள் ஒற்றுமை என்பது பிரதானமான விடயமாகும். ஒற்றுமை என்பது வெறும் போராடும் அமைப்புக்களிடையிலான ஒற்றுமையை மாத்திரம் குறிக்காது. பிரதேச வேறுபாடு, சாதி வேறுபாடு, மதவேறுபாடு, இனவேறுபாடு ஆகிய குறுகிய தன்மை கொண்ட வேறுபாடுகளைக் கடந்த ஒரு ஒற்றுமையை குறிப்பாக தமிழர்கள், முஸ்லீம்கள் என்ற பேதமின்றி; மலையகத் தமிழர், ஏனைய தமிழர் என்ற வேறுபாடின்றி; தாழ்த்தப்பட்டோர், உயர்ந்தோர் என்ற மனோபாவம் இன்றி ஈழமக்கள் அனைவரும் ஒரு முகமாக ஓரணியில் திரண்டு நிற்கிறார்கள் என்ற நிலையை நாம் நிலைநாட்டவேண்டும்.

இயக்கங்களுக்குள் ஜனநாயகமின்மை, இயக்கங்களுக்குள் சகோதர உறவின்மை என்னும் நிலைமைகளுக்கெதிராக நீங்கள் கிளர்ந்தெழுந்து தொடர்ச்சியாகப் போராடுவதும் உங்களின் பிரதான கடமைகளில் ஒன்றே.

எமது ஸ்தாபனத்தைப் பொறுத்தவரையில் ஈழமக்கள் அனைவரிற்குமிடையிலான ஒற்றுமைக்கும், இயக்கங்களிடையிலான ஒற்றுமைக்கும் தொடர்ந்து உழைத்து வந்திருக்கின்றோம். இனியும் தொடர்ந்து செயற்படுவோம். ஒற்றுமை என்பதை ஜனநாயகம், பரஸ்பர ஒத்துழைப்பு, உறவு என்பவற்றின் அடிப்படையில் உருவாவதையே நம்புகிறோம். அந்த அடிப்படையில் இயக்கங்களிடையேயான ஒற்றுமையை எதிர்காலத்தில் கட்டியெழுப்புவோம் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இச்சந்தர்ப்பத்தில் எமது போராட்டத்திற்குப்புத்துயிர் ஊட்டுவதற்கு தேசிய விடுதலைக்காகப் போராடும் ஏனைய குழுக்களையும் உற்சாகமிக்க போராளிகளாகக் களத்தில் செயற்பட்டுவிட்டு இன்று உதிரிகளாகப் திரியும் இளைஞர்களையும் புதிய

படிப்பகம்

www.padippakam.com



தெம்பு புதிய உற்சாகத்துடன் போராட வருமாறு அறை கூவல் விடுக்கிறோம். பிற்போக்குச் சக்திகளின் வெற்றிக் களிப்பு தற்காலிகமானது என்பதிலும், வரலாற்று எந்த வேளையிலும் பின்னோக்கிச்செல்வதில்லை என்பதிலும், தெளிவான உறுதியுடன் முன்னோக்கிச் செயற்படுவோம் என அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

## 3. தென்னிலங்கை மக்களுடன் உறவைப் பலப்படுத்தல்:

எமது போராட்டத்தின் நியாயத்தைப் புரிந்து கொண்டு செயற்பட்டு வந்த சிங்கள இளைஞர்கள் புத்தி ஜீவிகளில் நூற்றுக்கு மேற்பட்டோரை ஸ்ரீலங்கா அரசு கைது செய்து காலவரையறை இன்றி சிறையில் அடைத்து வைத்துள்ளது என்பதையும், அவர்களிற்சிலர் எம்மோடு சேர்ந்து ஸ்ரீலங்கா அரசுக்கெதிராக சதி முயற்சிகளில் ஈடுபட்டார்கள் என வழக்குத்தொடுத்துள்ளதையும், இன்னும் பல சிங்கள இளைஞர்கள், புத்தி ஜீவிகள் அரச படைகளால் தேடப்பட்டு வருகிறார்கள் என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

**எமது போராட்டமானது ஏகாதிபத்தியம், நவகாலனித்துவம், வர்க்க ஒடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறை, இனவெறி ஆகியவற்றிற்கெதிராக இந்த உலகில் நடைபெற்று வரும் போராட்டங்கள் எல்லாவற்றினது ஒரு பகுதியே**, அந்தவகையில் ஸ்ரீலங்கா இனவாத முதலாளித்துவ அரசின் அரசியல் பொருளாதார, சமூக ஒடுக்குமுறைகளுக்கெதிராக சிங்கள மக்கள் நடாத்திவரும் போராட்டங்களிலிருந்து எமது போராட்டத்தை நாம் தனிமைப் படுத்திப் பார்க்க முடியாது. சிறீலங்கா அரசானது எமக்கு மட்டுமல்லாது சிங்கள மக்களுக்கும் எதிரியே என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



எமது போராட்டத்தின் நியாய பூர்வமான தன்மையையும் எமது போராட்டத்தோடு சிங்கள மக்களின் போராட்டமும் ஒருங்கிணைக்கப்படவேண்டியதன் அவசியத்தையும் பரந்துபட்ட சிங்கள மக்களுக்குப் புரிய வைக்க வேண்டிய கடமை எம்முன் உள்ளது.

எம் மத்தியில் உள்ள சில இனவெறித்தன்மையுடைய குழுக்கள் அப்பாவிச் சிங்கள மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்வதிலும், தென்னிலங்கையிலுள்ள தொழிற்சாலைகளிலும், பொதுமக்கள் செறிவாக நடமாடும இடங்களிலும் குண்டு வெடிப்பு வேலைகளை மேற்கொள்ளுவதிலும் ஈடுபடுகின்றன. அக்குழுக்கள் சிறீலங்கா அரசின் பயங்கரவாதத்திற்கு தாங்களும் களைத்தவர்கள் அல்ல என நிருபிப்பதில் போட்டி போட்டு செயற்பட்டு வருகின்றன. இக்குழுக்களின் பயங்கரவாத நடவடிக்கைகளும் ஸ்ரீலங்கா அரசினதும் மக்கள் விடுதலை முன்னணியினதும் (JVP) ஈழப்போராட்ட விரோத, இந்திய விரோத இனவெறிக் கூச்சல்களாலும், சிங்கள மக்கள் மத்தியில் ஜனநாயக முற்போக்கு, புரட்சிகர நோக்கங்களுடன் செயற்பட்டுவரும் நட்பு சக்திகள், மிகவும் சிரமத்துக்கும், இயலாமைக்கும் உள்ளாக்கப்படுகின்றன.

மலையகப் பாட்டாளிகளுக்கு விரோதமான பிரச்சாரத்தின் மூலம் சிங்கள இளைஞர்களை திரட்டும்பாணியை முன்னர் கையாண்டு வந்த மக்கள் விடுதலை முன்னணி (JVP)யானது ஈழமக்களின் அரசியல் தீர்வு தொடர்பாக இந்தியா ஈடுபாடு காட்டத்தொடங்கியதைத் தொடர்ந்ததும் அவற்றிற்கு விரோதமான சுலோகங்களைத் தூக்கிப் பிடிக்கும் சந்தர்ப்பவாத இனவெறித்தந்திரோபாயங்களைக் கையாண்டு வருகிறது. ஈழத்தில் எவ்வாறு ஒரு தமிழீழ விடுதலைப்புலிகளோ அதே வகையான பண்புகளுடன் தென்னிலங்கையில் JVP செயற்பட்டு வருகிறது எபைதை நாம் அனைவரும் தெரிந்து கொள்ளவேண்டும். இன

படிப்பகம்

www.padippakam.com



**வெறித் தேசியவாதக்குழுக்கள் தோற்றத்தில் கவர்ச்சி மிக்கவையாக இருப்பினும் அவை எவ்வளவு ஆபத்தானவை - பாதகமான விளைவுகளைத்தருபவை என்பதை நீங்கள் அனுபவபூர்வமாக கண்டிருக்கிறீர்கள்.**

சிறீலங்கா அரசை அம்பலப்படுத்துவதிலும் அதன் இனவெறிப்பிடியிலிருந்து சிங்கள மக்களை விடுவித்து அரசுக்கெதிராக நிறுத்துவதிலும் தென்னிலங்கையிலுள்ள ஜனநாயக, முற்போக்கு மற்றும் இடதுசாரி அமைப்புக்கள் தம்மால் முடிந்த அனைத்தையும் செய்து வருகின்றன. சிறீலங்கா அரசின் இராணுவ, குண்டர்படை, JVPயின் அடாவடித்தனங்கள் இவற்றிற்கெதிராகப் போராடும் வேட்கையுடன் ஆங்காங்கே சிங்கள இளைஞர்களும் புத்திஜீவுகளும் சிறிது சிறிதாக அணிதிரண்டு கொண்டிருக்கிறார்கள்.

இதே வேளையில் சிங்கள மக்கள் மத்திலும் உள்ள ஜனநாயக, முற்போக்கு, இடதுசாரி மற்றும் புரட்சிகர சக்திகள் ஆகியவற்றிற்கிடையிலும் ஒருமுகப்பட்ட, பொது எதிரியைக்குறித்த ஓரணியில் திரண்ட நிலமை இல்லை என்பதே கவலைக்குரியதே. மேற்குறிப்பிட்ட சக்திகளுக்கிடையில் ஒரு ஐக்கியத்தை உருவாக்சிலதிலும் நாம் எம்மாலியன்ற பங்களிப்பை செலுத்த வேண்டியுள்ளது.

**இந்நிலையில் ஈழமக்களின் விடுதலைக்காகச் சிங்கள மக்கள் போராடுவதும் சிங்கள மக்களின் விடுதலைக்காக ஈழமக்கள் போராடுவதும் என இருபகுதி மக்களதும் போராட்டங்கள் ஒன்றோடொன்று ஒருங்கிசைந்த வகையான ஒரு புதிய வளர்ச்சிப் போக்கினை உருவாக்குவதில் நாம் அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.**

**இன்றைய வரலாற்றுக் கட்டாயங்களைப் புரிந்து கொண்டு உண்மையோடும் உறுதியோடும் செயற்படுவோம்.**

www.padippakam.com



## 4. சர்வதேச நட்புசக்திகளுடனுன உறவு :

1983 ம் ஆண்டைத் தொடர்ந்து, அமெரிக்க ஏகாதிபத்தியமும், சர்வதேச பிற்போக்கு ஆட்சிகளைக் கொண்ட பாகிஸ்தான், இஸ்ரேல், தென்னுப்பிரிக்கா ஆகிய நாடுகளும் ஈழமக்களுக்கெதிராக ஸ்ரீலங்கா அரசுக்கு எல்லாவகையிலும் ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றன.

சர்வதேச ரீதியில் எமது எதிரிகள் யார்? என்பதை அவர்களே தெளிவாக இனம் காட்டிக் கொண்ட படியால் எமது நண்பர்கள் யார்? என்பதை கண்டு கொள்வதில் எமக்குச் சிரமம் ஏதும் ஏற்படவில்லை. என்னும் நாம் எவ்வளவு தூரத்துக்கு எமது சர்வதேச நட்புறவு சக்திகளுடன் உறவை நெருக்கமாக்கியுள்ளோம். அதற்காக என்னென்ன முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். என்பன இன்னும் கேள்விக் குறிகளாகவே உள்ளன.

பெருந்தொகையான இஸ்ரேலிய இராணுவ ஆலோசகர்கள் இலங்கையில் இருக்கிறுர்கள். நூற்றுக்கணக்கான இராணுவத்தினர் ஆண்டு தோறும் பாகிஸ்தானில் விசேட பயிற்சி பெறுகிறுர்கள். தென்னுப்பிரிக்கா உட்பட பல நாடுகள் ஸ்ரீலங்கா அரசுக்கு நவீன ரக ஆயுத உதவிகளை வழங்கிக் கொண்டே இருக்கின்றன.

அமெரிக்க ஏகாதிபத்தியமும் சர்வதேச பிற்போக்கு ஆட்சிகளும் எதைத் தெளிவு படுத்துகின்றன என்ருல் அடக்குமுறை—ஒடுக்குமுறை என்பது சர்வதேச விவகாரமே தவிர தனியொரு நாட்டின் உள்நாட்டு விவகாரமல்ல என்பதேயாகும். எனவே அதற்கு மறுபுறமாக அடக்கு முறை ஒடுக்கு முறைக்கெதிரான போராட்டமும் சர்வதேச விடயமே, **உலகின் எந்த மூலையில் போராட்டம் நடந்தாலும் அவை ஒவ்வொன்றும் ஒன்ருே**

www.padippakam.com



**டொன்று தொடர்புபட்டவை என்பதை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.**

இன்றைய உலகில் நடைபெறும் தேசிய விடுதலை மற்றும் சமூக மாற்றல் என்பவற்றிற்கான போராட்டங்களிற்குத் துணையாக நிற்கும் சோசலிச மற்றும் புரட்சிகர ஜனநாயக நாடுகளும் தேசிய விடுதலை, சமூகப்புரட்சி சக்திகளும் எமது இன்றியமையாத நட்பு சக்திகள்.

உலக சமாதானம், ஏகாதிபத்திய எதிர்ப்பு. இன ஒடுக்குமுறை எதிர்ப்பு, தேசிய விடுதலை ஆதரவு போன்ற சர்வதேசக் கொள்கைகளைக் கொண்டிருக்கும் இந்தியா எமது நட்பு சக்திகளில் பிரதானமானதாக விளங்குகிறது. ஏனெனில் புவியியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும்; இந்தியாவும், இந்திய மக்களும், இந்திய அரசாங்கமும் கடந்த பல ஆண்டுகளாக வெளிப்படையாகத் துணைபுரிந்து வந்துள்ளதை நாம் அவதானத்தில் கொள்ளுதல் வேண்டும். இந்தியாவின் வரைறயகைளைப் புரிந்து கொள்கின்ற அதே வேளை எமது போராட்டத்தில் அண்மை நாடு என்ற வகையிலும் சர்வதேச ரீதியிலும் அதன் பாத்திரத்தையின் முக்கியத்துவத்தையும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.

இந்தியாவைப் பற்றி ஒரு கட்டத்தில் கண்மூடித்தனமான எதிர்ப்பு வாதங்கள் கிளப்புவதையும் இன்னொரு கட்டாயத்தில் சந்தர்ப்பவாத ஆதரவுச் கூய்ச்சல் எழுப்புவதையும் எம்மைப் போன்ற புரட்சிகர சக்திகள் மேற்கொள்ள முடியாது. எமது போராட்டத்திலும் நடைமுறையிலும் ஒரு ஒருங்கிணைவும், தொடர்ச்சியும் அவசியம்.

சர்வதேச ரீதியில் நாம் புரட்சியை வென்றெடுத்தவர்களுடனும், புரட்சியின் வெற்றி முனையில் இருப்

படிப்பகம்

www.padippakam.com



பவர்களுடனும், புரட்சிப் போராட்டங்களில் சளைக்காமல் போராடிக் கொண்டிருப்பவர்களுடனும் கடந்த கால முயற்சிகள் மூலம் உறவுகளை ஏற்படுத்திக் கொண்டது மட்டுமல்லாது, ஓரளவு நெருக்கங்களை ஏற்படுத்தியுள்ளோம். அவற்றை மேலும் எமது உறுதியான விடா முயற்சியான செயற்பாடுகள் மூலம் விரிவு படுத்துவோம், பலப்படுத்துவோம்.

**வெற்றிவரை போராடுவோம்!**

**அனைத்து முற்போக்கு,**

**ஜனநாயக சக்திகளும் அணிதிரள்க!**

★

படிப்பகம்

www.padippakam.com



நேற்றைய அனுபவங்களிலிருந்து படிப்பினைகளைப்பெற்ற புதிய சக்திகள் போராட்ட களத்தில் முன்னணியில் நிற்கவேண்டிய அவசிய மேற்பட்டுள்ளது. இந்த சக்திகள் எங்கிருந்து வரமுடியும்? அது மக்கள் மத்தியிலிருந்தே வரமுடியும்...

எமது தேசத்தின் விடுதலைப் போராட்டமென்பது; ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஆயுதப்படைப் பிரிவினரின் போராட்டமல்ல என்பதை தெளிவாக உணர்ந்து அதனை மக்கள் போராட்டமென்னும் உயர்ந்த வடிவ நிலைக்கு மாற்றுவதற்கான அத்தனை ஏற்பாடுகளையும் நிதானமாகவும், உறுதியாகவும் மேற்கொள்ளவேண்டும்.

EPRLF வெளியீடு 19-7-87

படிப்பகம்

www.padippakam.com

எமது போராட்டமானது ஏகாதிபத்தியம், நவகாலனித்துவம், வர்க்க ஒடுக்குமுறை, தேசிய ஒடுக்குமுறை, இனவெறி ஆகியவற்றிற்கெதிராக இந்த உலகம் முழுவதும் நடைபெற்றும் வரும் போராட்டங்கள் எல்லாவற்றினதும் ஒரு பகுதியே.

ஈழமக்களின் விடுதலைக்காகச் சிங்கள மக்கள் போராடுவதும், சிங்கள மக்களின் விடுதலைக்காக ஈழ மக்கள் போராடுவதும் என இரு பகுதி மக்களதும் போராட்டங்கள் ஒன்றோடொன்று ஒருங்கிணைந்த வகையான ஒரு புதிய வளர்ச்சிப்போக்கினை உருவாக்குவதில் நாம் அனைவரும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

படிப்பகம்